# முதலமைச்சர் பதவி பறிக்கப்பட வேண்டும்; ஏன்? எதற்கு?

“இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி இரகசிய காப்புறுதி மீறி நடந்து கொண்ட தமிழ்நாடு முதல்வர் “ஜோசப் விஜய்”யின்பதவி பறிக்கப்பட வேண்டும்! அவர் மீது குற்றவியல் வழக்கு தொடரப்பட வேண்டும்.

இரகசிய ஆவணங்கள் பரிமாற்றப்படும் அமைச்சரவைக் கூட்டங்கள், ஆய்வுக் திட்டங்கள் மற்றும் இதர உயர்மட்ட அரசு ஆலோசனைகள் நடைபெறும் அந்த இடத்தில் வேறு யாரும் இடம் பெறக் கூடாது.

கழகப் பாராளுமன்ற மாநிலங்களவைஉறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான வில்சன் அவர்கள் இருவரது அதிகாரப்பூர்வப் பதவிகளைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும், எந்த அதிகாரத்தின் கீழ் அவர்கள் அமைச்சரவைத் கூட்டங்களில் கலந்து கொண்டு அதிகாரிகளுக்கு உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்கள்? என்பதைப் பொதுமக்களுக்கு ஜோசப் விஜய் தெரியப்படுத்த வேண்டும், என்றும் கேள்வி எழுப்பி உள்ளார்.

மேலும், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவுரைகள் பெற்று, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மற்றும்மூத்த வழக்கறிஞர்வில்சன் ஆகியோர் தமிழ்நாடு ஆளுநர் இராஜேந்தர் விஸ்வநாத் அர்லேகர் (Rajendra Vishwanath Arlekar)காவல் துறைத் தலைமை இயக்குநர் ஆகியோரைச் சந்தித்து, ‘அரசியலமைப்புச் சட்டத்தை மீறி, அரசுக்குத் தொடர்பு இல்லாத நபர்களை அரசுக் கூட்டத்தில் அனுமதித்த முதலமைச்சர் விஜய் மீது தக்க சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்’ என்று தி.மு.க. சார்பில் புகார் மனு ஒன்றை அளித்துள்ளனர். அதைப்போல அ.தி.மு.க.வின் இன்பத் துரை எம்.பி, அக்ரி கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் பா.ஜ.க.வின் தலைவர் நைனார் நாகேந்திரனும் மற்றவர்களும் முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் முதல்வர் பொறுப்பில் இருந்து விலக வேண்டும்’ என்றுஆளுநரை நேரில் சந்தித்துப் புகார் மனுஅளித்துள்ளனர்* .

ஜான் ஆரோக்கிய ராஜ், விஷ்ணு ரெட்டி ஆகியோரிடத்தில் மொத்த நிர்வாகத்தையும் ஜோசப் விஜய் ஒப்படைத்து விட்டாரா? அவர்கள் இருவரும் எந்தத் தகுதியின் அடிப்படையில், இரகசிய ஆவணங்கள் கையாளப்படும் அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கேற்றனர்? முதலமைச்சர் அறைக்கு அருகில் இருவருக்கும் தனி அறை(Chambers)ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிய வருகிறது. அதற்கான அரசாணை (G.O)பொது வெளியில் வெளியிடப்பட வேண்டும்* .

அமைச்சரவையில் பங்கேற்க வைப்பதற்குப் பதிலாக, அவர்களை முறைப்படி அமைச்சராக்கி விட வேண்டியது தானே?

முதலமைச்சர், மற்றும் அமைச்சர்கள் பதவியேற்கும் போது இரகசிய பாதுகாப்புப் பிரமாணம் எடுத்துக் கொள்கின்றனர். ஆனால், எந்த தொடர்பும் இல்லாத ஜான் ஆரோக்கியசாமி, விஷ்ணு ரெட்டி ஆகிய தனி நபர்களை அமைச்சரவை ஆய்வுக் கூட்டங்களில் பங்கேற்க அனுமதித்தது; அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூறப்படும் இரகசியக் காப்புரிமையை முற்றிலும் மீறியகுற்றச் செயலாகும் அல்லவா? இதில் ஆளுநர்முன் இரகசிய காப்புரிமை எடுத்துக் கொண்ட அவர்கள்; அரசமைப்புச் சட்டத்தை மீறிக் குற்றச் செயல் புரிந்தஅவர்கள் மீது ஆளுநர்என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்? பதவி பறிப்பு, ஆட்சிக் கலைப்பு போன்ற சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டாமா?அரசியல் அமைப்புச் சட்ட உறுப்பு 167 இன் படி ஆளுநர் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி அறிக்கை கேட்கப்பட வேண்டும்; சி.சி.டி.வி. கண்காணிப்புக் கேமரா பதிவுகள் மற்றும் வருகைப் பதிவேடுகள் முழுவதும் ஆய்வுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்; சட்ட மீறலை நடத்துவதற்குத் துணை நின்ற அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அரசியல்சட்டம்அமைச்சர்களுக்கானஉறுதிமொழி பற்றிஎன்னசொல்கிறது?

“அ,ஆஆகிய நான்,இறைவன் பெயரால் ஆணை உறுதிமொழி செய்து மாநிலத்தின் அமைச்சர் என்ற முறையில் நான் அறிய வரும் அல்லது என் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் எந்தச்சங்கதியையும் அமைச்சராகப் பணியாற்றும் வகையில், அவசியப்பட்டாலன்றி, எத்தகைய நபர் அல்லது நபர்களிடமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வெளிப்படுத்த மாட்டேன் என்றும் உறுதியளிக்கிறேன்” (I A, B, do swear in the name of God / Solmnleyafirm that I will not directly or indirectly communicate or reveal to any person or persons any matter which shall be brought under my consideration or shall become known to me a Minister for the State of ......eccept as may be required for the due discharge of my duties as such Minister)*ஆகவே, இரகசிய உறுதிமொழி மீறிச் செயல்பட்ட செயல் அப்பட்டமாக இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 164 (3) ன் படி மூன்றாவது அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ள படிவத்தில் கூறியுள்ளவாறு, பதவி பிரமாணமும், இரகசியக் காப்பு உறுதிமொழியும் செய்து கொண்ட பிறகு தான் முதலமைச்சரும், அவருடைய அமைச்சர்களும் தங்கள் அலுவல்களைத் தொடங்கி இருக்கிறார்கள்.

ஆகவே, ஒரு துறையின் அமைச்சர் என்ற முறையில் தனது நடவடிக்கைக்கு வரும் எந்த ஒரு பொருள் குறித்தோ,மாநிலத்தின் அமைச்சர் என்ற முறையில் தெரியவரும் வேறு விவகாரங்களையோ, விவரங்களையோ நேரடியாகவும் மறைமுகமாகவோ யாருக்கும் வெளிப்படுத்த மாட்டேன் என்று தனித்தனியாக ஒவ்வொரு அமைச்சரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்ட பிறகுதான் அமைச்சர்களாகப் பொறுப்பேற்கிறார்கள். ஆளுநர் தான் அரசியலமைப்புச் சட்டப்படி அந்த உறுதிமொழி ஏற்பைச் செய்து வைக்கிறார்.193 ஆவது பிரிவுப்படி சட்டமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்புச் சட்டத்தின் படி உறுதிமொழி மேற்கொண்ட பிறகு தான்; அவர் உறுப்பினராகச் செயலாற்ற முடியும். இல்லாவிட்டால், அந்த உறுப்புப்படி பதவி இழப்பு மற்றும்தண்டனைக்கு உள்ளாவார்கள்.

ஆகவே, அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளின் உறுதிமொழியை மேற் கொள்ளாதவர்கள் உறுப்பினர்களாகவோ, அமைச்சர்களாகவோ இருக்க முடியாது என்பதைத் திட்டவட்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. அவ்வாறுஉறுதி மொழியை மேற்கொண்டவர்கள் அதற்கு எதிராகச் செயல்பட்டால் அந்தப் பொறுப்புகளில் நீடிக்கும் தகுதியை அவர்கள் இழந்து விடுகிறார்கள் .

ஜோசப் விஜய் முதலமைச்சர் என்ற முறையிலும் சில துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பவர் என்ற முறையிலும், அவர் தொடர்புடைய ஆவணங்களையும், தகவல்களையும் பெற முடியும். அது போன்று தலைமைச் செயலாளர், துறைச் செயலாளர்கள்ஆகியோருக்கு விவரங்கள் தெரிந்திருக்கும் .இந்த நிலையில் மிகவும் கமுக்கமாகக் காக்கப்பட வேண்டிய தகவல்களைத் தமது சுயநலத்துக்காக அவர்கள் வெளிப்படுத்தினால் அல்லது பத்திரிகைகள் உடந்தையாக இருந்து செயல்பட்டால் அல்லது அதிகாரிகள் கட்டுப்பாட்டை மீறி நடந்து கொண்டால் அல்லது வெளி நபர்கள் பங்கேற்றுத் தெரிந்து அத்துமீறிவெளியிட்டால் அவர்கள் மீது 1923 ஆம் ஆண்டைய அரசு சார்ந்த இரகசியங்கள் சட்டத்தின் படி குற்றம் இழைத்து இருக்கிறார்கள் என்றும்; குற்றவியல் சட்டம் மூலமும் நடவடிக்கை எடுக்க முடியும். அது மட்டுமல்லாமல் அவர்கள் மீது இரகசியக் காப்பு பிரமாணத்தை மீறிவிட்டார் என்பதற்காகவும் முதலமைச்சர் மற்றும் உடந்தையாக இருந்த தலைமைச் செயலாளர், துறைச் செயலாளர்கள் அரசமைப்புச் சட்ட விதிகளை மீறிய பிறகு எந்த அடிப்படையில்இன்னும் பதவியில் தொடர்கிறீர்கள்? என்று கேட்கும் ‘கோ வாரண்டோ’ ரிட் மனுவைத் தாக்கல் செய்யலாம். ஏற்கெனவே, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி சந்துருக்கர், நீதிபதி எம். சீனிவாசன் அடங்கிய அமர்வுஅரசியல் அமைப்பு சட்ட உறுதிமொழியை மீறி விட்டதாகப் பதவி இழப்பை உள்ளாக்கி இருக்கிறது . நாடாளுமன்ற மக்களவை நடைபெற்ற விவாதங்களில் இப்படியான விவரங்கள் பற்றித் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது (லோக்சபா விவாதங்கள் 20.3.1969 பக்கங்கள் 192-213)


**கவிஞர் தமிழ்தாசன்**
கழக தீர்மானக் குழுத் தலைவர்




ஆகவே, முதல்வர் ஜோசப் விஜய் இரகசிய ஆவணங்களை காப்பாற்றாததால், அமைச்சரவை முடிவில் பங்கேற்க வைத்த அவரது இரு நண்பர்களாலும் பதவி விலகல்மட்டுமல்லாமல்; பொறுப்பேற்று மந்திரி சபையே கலைக்க செய்ய நேரிடும். அது மட்டும் இல்லாமல் கிரிமினல் நடவடிக்கைக்கு உட்பட்டே தீர வேண்டும். ஆளுநர் அரசியலமைப்புச் சட்டப்படி உரிய சரியான முடிவு எடுக்க வேண்டும்.

*உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞரும் தமிழ்நாடு அரசின் அரசுத் தலைமை வழக்கறிஞராகப் பணியாற்றிய வருமான காஜா நஸ்ருதீன்அவர்கள், அரசியலமைப்புச்சட்ட இரகசிய உறுதிமொழிகளை மீறியதற்காக உறுதியாகப் பதவிப்பறிப்பு செய்யப்பட வேண்டும் என்று சட்ட விளக்கங்களைப் பலவாறாகத் தருகிறார்.

**வழக்குச் சட்டங்கள்:ஏடிபி. ஏர்ராபர் எதிர் கோவா அரசு** அமைச்சரவை அமைச்சர்களின் பதவித் தகுதி வழங்கப்பட்ட நாடாளுமன்றச் செயலாளர்களின் நியமனத்தை பம்பாய் உயர் நீதிமன்றம் ரத்து செய்தது. அங்கீகரிக்கப்படாத நபர்களை அத்தகைய பதவிகளை வகிக்க அனுமதிப்பது அரசியலமைப்பின் 164 மற்றும் 164 (1) பிரிவுகளை மீறுவதாகும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**குடிமக்கள் உரிமைகள் மன்றம் எதிர் வழக்கில்...** இந்திய ஒன்றிய வழக்கில், அரசியலமைப்புச் சட்டத்தின் அங்கீகாரம் இல்லாமல் நியமிக்கப்பட்ட நபர்கள் எந்தவொரு நிர்வாகப் பணியையும் செய்ய முடியாது என்று தீர்ப்பளித்து, இமாச்சலப் பிரதேச உயர் நீதிமன்றம் அத்தகைய நியமனங்களை ரத்து செய்தது.

**உத்தரப் பிரதேச அரசு எதிர் சிங்ரா சிங் வழக்கில்**, ‘ஒரு காரியம் ஒரு குறிப்பிட்ட முறையில் செய்யப்பட வேண்டும் என்றால், அது அந்த முறையில்தான் செய்யப்பட வேண்டும் அல்லது செய்யப்படவே கூடாது’ என்ற கோட்பாட்டை நீதிமன்றம் நிலைநிறுத்தியது. ஏனெனில், அரசியலமைப்பின் 166(3) பிரிவின் கீழ் வகுக்கப்பட்ட அரசின் அலுவல் விதிகள், அமைச்சரவைக் கூட்டங்களில் யார் கலந்துகொண்டு விவாதிக்க லாம் என்பதைத் தெளிவாக வரையறுக்கின்றன. இதில் ஏற்படும் எந்தவொரு விலகலும் இதற்கு முரணான முடிவை ஏற்படுத்தக் கூடும்.

**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு** 8(வீ),அமைச்சரவை ஆவணங்கள் தொடர்பானது. இதில் அமைச்சர்கள் குழு, செயலாளர்கள் மற்றும் பிற அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டப் பதிவுகளும் அடங்கும். அமைச்சர்கள் குழுவின் முடிவுகளும், அந்த முடிவுகள் எடுக்கப்பட்டதற்கான ஆதாரங்களும், முடிவு எடுக்கப்பட்ட பிறகு பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும். ஆகவேஅமைச்சர்கள்கூட்டத்தில்அரசியல் அமைப்புசட்டஇரகசியஉறுதிமொழிகளைமீறிநடந்து கொண்டமுதல்வர்ஜோசப்விஜய்தன்பதவியைநீங்க வேண்டும். அவர்மீது கிரிமினல்குற்றவியல் வழக்கு தொடரப்படவேண்டும்.

---

### திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே தாழவேடு கிராமத்தில்

# குடிக்கத் தண்ணீர் கூட கிடைக்காத அவலம்!

## த.வெ.க. அரசைக் கண்டித்து பெண்கள் சாலை மறியல்!



*திருவள்ளூர் ஜூலை 8*

“மக்கள் நல ஆட்சி” என்று கூறி ஆட்சிப் பொறுப்பேற்ற த.வெ.க. அரசின் நிர்வாகத்தில், குடிநீர் போன்ற அடிப்படை தேவைக்காகவே பொதுமக்கள் சாலையில் இறங்கி போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் கடுமையாக விமர்சிக்கின்றன. நிர்வாக அலட்சியம், பராமரிப்பு குறைபாடு மற்றும் பிரச்சினைகள் ஏற்பட்ட பிறகே நடவடிக்கை எடுக்கும் நடைமுறையே மாநிலத்தின் பல பகுதிகளில் தொடர்வதாகவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியத்துக்குட்பட்ட தாழவேடு காலனியில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பகுதிக்கு இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் மூலம் மின் மோட்டார்கள் உதவியுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் தண்ணீர் ஏற்றப்பட்டு, பின்னர் தெருக் குழாய்கள் வழியாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு ஒரு மின் மோட்டார் பழுதடைந்ததால், ஒரே ஒரு மோட்டாரை மட்டுமே நம்பி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் ஏற்கனவே குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த நிலையில், மீதமிருந்த மற்றொரு மோட்டாரும் இன்று திடீரென செயலிழந்ததால், கிராமம் முழுவதும் குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. குடிப்பதற்கே தண்ணீர் இல்லாத அவலநிலையால் பெண்கள், முதியவர்கள் மற்றும் குழந்தைகள் கடும் சிரமத்தை சந்தித்ததாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த பெண்கள் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திருத்தணி -நாகலாபுரம் மாநில நெடுஞ்சாலையில் திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள், வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள், பேருந்து பயணிகள் உள்ளிட்ட ஏராளமானோர் நீண்ட நேரம் சாலையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு பள்ளி வாகனங்கள் மற்றும் பேருந்துகளுக்கு மட்டும் போராட்டக்காரர்கள் வழிவிட்டனர்.

போராட்டம் நீண்ட நேரம் நடைபெற்றபோதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக வரவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சாட்டினர். இதனால் பொதுமக்களிடையே மேலும் அதிருப்தி ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் போலீசார் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தி, பழுதடைந்த மோட்டாரை விரைந்து சீரமைத்து குடிநீர் விநியோகத்தை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து போது. பொதுமக்கள் “குடிநீர் போன்ற அத்தியாவசிய தேவையையே சீராக வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பது அரசின் நிர்வாக திறன் குறித்து கேள்விகளை எழுப்புகிறது. பிரச்சினைகள் ஏற்பட்ட பிறகே அதிகாரிகள் களமிறங்கும் நடைமுறை தொடாராமல், முன்னெச்சரிக்கை பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளன.

---

### திருவள்ளூர் மாவட்டம் - பள்ளிப்பட்டு த.வெ.க. நிர்வாகிகள்

# ஆரம்ப சுகாதார நிலையங்களில் விஜய் படத்தை மாட்டி அடாவடி!

## ‘ரீல்ஸ் அலப்பறை’ அரசியலுக்கு முடிவுகட்ட நடவடிக்கை எப்போது?

*திருவள்ளூர், ஜூலை 8:*

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பள்ளிப்பட்டு மேற்கு ஒன்றியத்தில், தமிழக வெற்றி கழக ஒன்றிய செயலாளர் ரமேஷ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் அரசு பள்ளிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அரசியல் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் அப்பகுதியில் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளன.

குற்றச்சாட்டுகளின்படி, அரசு பள்ளிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று தமிழ்நாடு முதலமைச்சரின் படங்களை வழங்கி, அவற்றை அரசு வளாகங்களில் பொருத்தியதாகவும், பின்னர் அந்த நிகழ்வுகளை சினிமா பாடல்களுடன் ரீல்ஸ் வடிவில் சமூக வலைதளங்களில் வெளியிட்டு அரசியல் விளம்பரமாக பயன்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

மேலும், அரசு பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் செவிலியர்களுக்கு சால்வை அணிவித்து, அது அரசியல் பாராட்டு நிகழ்ச்சி போல காட்சிப்படுத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அரசு ஊழியர்கள் அரசியல் நடுநிலையுடன் செயல்பட வேண்டிய நிலையில், இத்தகைய நிகழ்வுகள் குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அரசு பள்ளிகளும், அரசு மருத்துவ நிலையங்களும் அனைத்து மக்களுக்கும் சொந்தமான பொது நிறுவனங்கள். அவற்றின் வளாகங்கள் எந்தக் கட்சியின் விளம்பரத்திற்கும் பயன்படுத்தப்படக்கூடாது என்பதே நிர்வாக நெறிமுறைகளின் அடிப்படை நோக்கமாகும். எனவே, அரசு நிறுவனங்களில் அரசியல் நடவடிக்கைகள் நடைபெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையா என்பதை சம்பந்தப்பட்ட துறைகள் உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

அரசு நிறுவனங்கள் அரசியல் போட்டிக்கான களமாக மாறுகின்றன என்ற எண்ணமே பொதுமக்களின் நம்பிக்கையை பாதிக்கக்கூடும். இதுபோன்ற குற்றச்சாட்டுகள் எழும்போது, அவற்றை அலட்சியப்படுத்தாமல், வெளிப்படையான விசாரணை நடத்தி உண்மை நிலையை மக்களிடம் தெரிவிப்பது நிர்வாகத்தின் பொறுப்பாகும்.




எனவே, இந்த விவகாரம் தொடர்பாக கல்வித்துறை, சுகாதாரத்துறை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரிவான விசாரணை மேற்கொள்ள வேண்டும். குற்றச்சாட்டுகள் ஆதாரங்களுடன் உறுதி செய்யப்பட்டால், விதிமுறைகளை மீறியவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், எதிர்காலத்தில் அரசு நிறுவனங்கள் அரசியல் விளம்பர நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத வகையில் தெளிவான வழிகாட்டுதல்கள் அமல்படுத்தப்பட வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொள்ளாச்சி எஸ். ராஜு

**ஜூலை 8 (2014)**



**தனது இளமை காலந்தொட்டே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பொள்ளாச்சி பகுதியில் பணியாற்றியவர்**

**1972ஆம் ஆண்டு முதல் 2007 ஆண்டு வரை தொடர்ந்து பொள்ளாச்சி நகரச் செயலாளராகவும் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகத்திற்கு சோதனை ஏற்பட்டபோது கொங்கு மண்டலத்தில் கழகத்தை வளர்த்திட பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.**

**பொள்ளாச்சி நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர்மன்றத் தலைவராகவும் பொறுப்பு வகித்ததுடன், 1996ஆம் ஆண்டு பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**1959ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**